டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, முதன்மை வனப் பாதுகாவலருடைய ஆட்சேபணை இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் இந்த முயற்சியைத் தடை செய்யவேண்டும் எனக் கோருகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசால் எந்தவிதமான உரிமங்களோ அல்லது உத்தரவுகளோ இறுதி நிலையிலே இதுவரை அளிக்கப்படவில்லை என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். ஆட்சேபணைகள் குறித்து விசாரிப்பதற்காக அரசுத் துறைச் செயலாளர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு, அந்த இடத்தைப் பார்வையிட்டு வந்திருக்கிறது. அந்தக் குழுவினுடைய அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அறிக்கையின் அடிப்படையில் அரசு இறுதி முடிவினை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு, (குறுக்கீடு) டாக்டர் ஸ்ரீதரன், உங்களுக்கு ஒன்றே ஒன்றுதான். அதாவது, இரண்டுக்கு மேற்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்கிறபோது, ஒரு கேள்விதான் அனுமதிப்பது உண்டு.

அடுத்த கவன ஈர்ப்பு, திரு. எச். எம். ராஜு, இருக்கையில் இல்லை.

அடுத்த கவன ஈர்ப்பு, திரு. கே. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

திரு. சிங்காரம், உங்களுடைய கவன ஈர்ப்பு குறித்துக் கேளுங்கள்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. கே. கந்தசாமி அவர்களின் கவன ஈர்ப்பு குறித்து, அவருக்குப் பதிலாக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒருவருடைய கவன ஈர்ப்பில் இன்னொருவர் வரமுடியாது. உங்களுடைய கவன ஈர்ப்பு பற்றி கேளுங்கள். (குறுக்கீடு)

(உ) பேராவூரணி சோழன்போக்குவரத்துக் கழக டெப்போவிலிருந்து ஓடிக்கொண்டிருந்த சில நகரப் பேருந்துகள் நிறுத்தப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.ஆர் சிங்கராம், அவருடைய கவன ஈர்ப்பை எடுத்துக்கொள்ள அழைக்கப்படும் போது இல்லாவிட்டாலும், அவருடைய கவன ஈர்ப்பைத் திரும்ப எடுத்துக்கொள்ளவேண்டும் என்று வந்து கேட்கிற காரணத்தினால் அவருடைய வேண்டுகோளை ஏற்று, அவருடைய கவன ஈர்ப்பு எடுத்துக் கொள்ளப்படுகிறது. திரு. ஆர். சிங்காரம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவன்த்திற்குக்கொண்டு வருவார். திரு. ஆர். சிங்காரம்.

1994 ஜனவரி 5]

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி சோழன் போக்குவரத்துக் கழக டெப்போவிலிருந்து ஓடிக்கொண்டிருந்த சில நகரப் பேருந்துகள் நின்றுவிட்டது குறித்து" மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை

சோழன் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பேராவூரணியிலிருந்து இயக்கப்படவேண்டிய 14 நகரப் பேருந்துகளில் ஒரு நகரப் பேருந்து மட்டும் (தடம் எண். 11) கடந்த டிசம்பர் மாதம் 20 முதல் 25 தேதி வரை இயக்கப்படாமல் இருந்துள்ளது.

2. கடந்த டிசம்பர் 19-ஆம் தேதி முதல் தொடர்ந்த பெருமழை, புயல் எச்சரிக்கை காரணமாகவும் சாலை சரியின்மை காரணமாகவும் 18 நடைகள் இயக்கப்படவேண்டிய முடச்சிக்காடு வழித்தடத்தில் தடம் எண் 1 பேருந்தினை கொண்டு 14 நடைகள் இயக்கப்பட்டது.

3. மீண்டும் டிசம்பர் 26 ஆம் தேதி முதல், அனைத்துப் பேருந்துகளும் முழுமையாக இயக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் படித்தேன். நான் சொல்லியபடி நகரப்பேருந்துகள் நின்றுவிட்டது உண்மை என்றும், அதன் பிறகு சீர்செய்து ஓடிக்கொண்டிருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு மார்ச் பட்ஜெட் நேரத்தில், இதே சபையில் நம்முடைய போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களிடத்தில் பேராவூரணி டெப்போவில் ஓடிக்கொண்டிருக்கிற நகரப் பேருந்துகள் யாவும் ஒழுகிக் கொண்டிருக்கின்றன. அதை உடனடியாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க உடனடியாக 11 நகரப் பேருந்துகளை இரவோடு இரவாக மாற்றி கொடுத்ததற்கு நான் நன்றி சொல்லியிருந்தேன். இன்றும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த ஓராண்டுக் காலத்தில் அந்த நகரப் பேருந்துகளும் மீண்டும் ஒழுகிக்கொண்டிருக்கின்ற சூழ்நிலைக்கு ஆளாகிவிட்டது. மீதி நகரப் பேருந்துகளும் மோசமான சூழ்நிலையில் இருக்கிறது. ஆகவே அதை தயவுசெய்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், அந்த நகரப் பேருந்துகளை, தற்போது இரண்டு கோடி ரூபாய்க்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக நான் கேள்விப்பட்டேன். அப்படி அந்த உத்தரவில், பேராவூரணி சோழன் டெப்போவிலிருந்து புறப்படுகின்ற பேருந்துகள் அனைத்தும் மிக மிக மோசமான சூழ்நிலையில் இருக்கின்ற காரணத்தினால் தயவு செய்து,

அதை மீண்டும் பரிசீலனை செய்து, புதிய வண்டிகளாக விடுவதற்கும், ஏனைய நிறுத்தப்பட்ட 4 பேருந்துகளை விடுவதற்கும் உடனடியாக போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் உடனடியாக செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.35

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சிங்காரம் போன்ற கடமை உணர்ச்சியோடு தொகுதிக்கு பணியாற்றக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு இந்த அரசைப் பொறுத்தவரையில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அரசு, மிக விரைவாக உங்களுக்குச் சிறந்த பேருந்துகளை, வேண்டியப் பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும். அதேபோல், இந்த வழித்தடங்களில் பேருநதுகள் நிறுத்தப்பட்டதற்குக் காரணம் புயல் வெள்ளத்தின் காரணமாக 20-ம் தேதியிலிருந்து 25-ஆம் தேதி வரை 5 நாட்கள் மட்டும்தான் அந்தப் பேருந்துகளை அங்கே இயக்க முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறப்பான முறையிலே தொகுதிக்கு பணியாற்றக்கூடியவர்கள். கடமையுணர்வோடு சட்டமன்றத்திற்கு வரக்கூடியவர். ஆகவே கடமையுணர்வோடு உங்களுடைய பணிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிவிப்பு

கவன ஈர்ப்புக்குரிய பதில்கள் வரப்பெற்றவுடன் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானங்களைப் பொறுத்தமட்டில், உறுப்பினர்கள் கொடுத்த அனைத்து கவன ஈர்ப்புத் தீர்மானங்களும் அரசுக்கு அனுப்பப்பட்டு இன்றுவரை கிடைத்திருக்கிற பதில்களை வைத்து, இன்றைக்கு 7 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் பேரவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. தொகுதி சம்பந்தமாக கொடுத்த உறுப்பினர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல் கடமையுணர்வோடு வந்து தொகுதிப் பிரச்சினையை எழுப்பாவிட்டாலும், பேரவையைப் பொறுத்தமட்டில் கொடுத்த உறுப்பினர்களுடைய பிரச்சினைகள் அனைத்தும் அரசுக்கு அனுப்பப்பட்டு பதில்கள் பெறப்பட்டிருக்கின்றன. பெற்ற வரையிலும், துறைக்குக் கிடைத்த பதில்கள் வரையிலும், இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இனிமேல் பதில்கள் வந்தவுடன்